அ.வ.எண்: 51/2019 நாள்: 18.03.2026

வா.சா.1 –ஜெகன் ஜான்

வில்லியம்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

1. தாவா சொத்து சம்பந்தமான இனாம் செட்டில்மென்ட் பத்திரத்தை ரத்து செய்த விபரம் எனது தந்தைக்கு எப்பொழுது தெரியும் என்றால் 2019 ஆம் ஆண்டு தெரியும். எப்பொழுது மேற்படி ஆவணம் ரத்து செய்யப்பட்டது என்றால் 17.06.2014 அன்று ரத்து செய்யப்பட்டது. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.138/1 ஆகும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 9 சென்ட் ஆகும். மேற்படி இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்பட்டது குறித்து எனக்கு எப்பொழுது தெரியும் என்றால், 2019 ஆம் ஆண்டு தான் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 ஆவணமான மேற்படி இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் 20.07.2017 அன்று வாங்கப்பட்டுள்ளது என்றால், எனது தந்தைதான் வாங்கி உள்ளார். மேற்படி ஆவணத்தை பற்றிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. மேற்படி ஆவணத்தை பற்றிய முழு விவரமும் எனது தந்தைக்கு தான் தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்தை பொருத்து 1ம் பிரதிவாதி

எனது தந்தைக்கு இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்ததாக தான் வழக்கு தாக்கல் செய்து உள்ளோம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என் தந்தைக்கு எப்பொழுது இனாம் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் 2009 ஆம் ஆண்டு எழுதிக் கொடுத்தார். தாவா சொத்தை மேற்படி 1ம் பிரதிவாதி 2004 ஆம் ஆண்டு கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தில் தற்போது மூன்று வீடுகள் உள்ளது என்றால் சரியல்ல, இரண்டு வீடுகள் தான் உள்ளது. தாவா சொத்தை 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பிறகு, அதிலிருந்த வீட்டில் தான் எனக்கு 2005 ஆம் ஆண்டு காதுகுத்து நடைபெற்றது என்றால் சரியல்ல, எனது காதுகுத்து எங்களது பழைய வீட்டில்தான் நடைபெற்றது. தாவா சொத்தின் சொரூப அமைப்பை எனது பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன். அதற்கு உரிய புகைப்படங்களும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. தாவா சொத்தில் தற்போது யார் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால், நாங்கள் தான் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறோம். நாங்கள் மட்டும்தான் அனுபவம் செய்து வருகிறோமோ என்றால், பழைய வீட்டில் எனது தாத்தா வசித்து வருகிறார். மேற்படி பழைய வீடு எனது வீட்டிற்கு எந்த திசையில் உள்ளது என்றால், தெற்கு திசையில் உள்ளது. மேற்படி பழைய வீடு 1ம் பிரதிவாதியால் கட்டப்பட்டது என்றால் சரியல்ல, எனது அம்மா தான் கட்டினார். மேற்படி பழைய வீடு

எந்த ஆண்டு கட்டப்பட்டது என்றால் 2009 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. தாவா வழக்கின் 2,3 பிரதிவாதிகள் தற்போது எங்கு வசித்து வருகிறார்கள் என்றால் எங்களது வீட்டிற்கு தெற்கு பக்கத்தில் உள்ள வீட்டில் வசித்து வருகிறார்கள். மேற்படி தெற்கு பக்கத்தில் இருக்கும் வீடு எவ்வளவு அளவிற்கு கட்டப்பட்டுள்ளது என்றால், சுமார் 2 1/2 செண்ட் அளவிற்கு கட்டப்பட்டுள்ளது. மேற்படி 1ம் பிரதிவாதி வசித்து வரும் வீடு எவ்வளவு அளவிற்கு கட்டப்பட்டது என்றால், நான் மேற்சொன்ன வீடுதான் 1ம் பிரதிவாதியால் கட்டப்பட்ட வீடு.

4. மேற்படி வீட்டிற்கு வரி வகையறாக்கள் யார் பெயரில் உள்ளது என்றால் எனது தாத்தா பெயரில்தான் உள்ளது. 2009 ஆம் ஆண்டு நான் என்ன வேலை பார்த்து வந்தேன் என்றால், நான் படித்துக் கொண்டிருந்தேன், வீட்டை எனது தாயார் தான் கட்டினார். எனது தாயாரை விசாரித்தால் உண்மை தெரியும் என்றால் சரிதான். நான் குடியிருந்து வரும் வீடு எந்த அளவிற்கு கட்டப்பட்டுள்ளது என்றால் சுமார் 2 செண்ட் அளவிற்கு கட்டப்பட்டுள்ளது. எனது சித்தப்பா ஆன மரியஆரோக்கியசாமி தற்போது எங்கு உள்ளார் என்றால், எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் வசித்து வருகிறார். அவர் எந்த சர்வே எண்ணில் வசித்து வருகிறார் என்றால் சர்வே எண்.138/2–ல் வசித்து வருகிறார் அவர் வசித்து வரும் வீடு எப்பொழுது கட்டப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் உள்ள வீட்டைத் தவிர அந்த கிராமத்தில் வேறு வீடு இல்லை என்றால் சரிதான். சருகனி பஞ்சாயத்து தலைவரை விசாரித்தால்

எந்த வீடு எந்த ஆண்டு கட்டடப்பட்டது என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான்.

5. தாவா சொத்தின் சொரூப அமைப்பை நிரூபிக்கும் பொருட்டு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வதற்கான மனுவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் மூலம் சர்வேயர் உதவியுடன் தாவா சொத்தை அளந்து பார்த்தால் அதன் அளவு மற்றும் அதில் எத்தனை வீடுகள் உள்ளது என்று விவரம் தெரியவரும் என்றால் சரிதான். என் தந்தை பெற்ற இனாம் செட்டில்மென்ட் ஆவணம் எந்த சூழ்நிலையில் எப்படி 1ம் பிரதிவாதியிடம் எழுதி வாங்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றும் என் தந்தைக்கு தான் தெரியும் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்ற விவரம் என் தந்தைக்கு தான் தெரியும் என்றும் எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரிதான். மேற்படி ஆவணத்தில் தாவா சொத்து முழுவதும் நஞ்சை நிலமாக காலி இடமாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் தாவா சொத்தில் வீடுகள் இருந்தது என்றால் சரியல்ல. நான் எங்கு பிறந்து வளர்ந்தேன் என்றால் பழனிவேல் கிராமத்தில் கோவிலுக்கு அருகே உள்ள குடிசை வீட்டில் தான் நானும் எனது தங்கையும் பிறந்தோம். பின்பு எனது தாத்தா பாட்டியின் ஊரான மணக்குடிக்கு சென்று விட்டேன். மேற்படி குடிசை

வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி குடிசை வீடு யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது. மேற்படி குடிசை வீட்டிற்கான வரி விதிப்பு எண் மற்றும் மின் இணைப்பு எண் பற்றி தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு நினைவில் இல்லை. நான் எந்த வருடம் மணக்குடிக்கு சென்றேன் என்றால் 1995 ஆம் வருடம் சென்றேன். பின்பு எப்பொழுது நிரந்தரமாக பழனிவேல் கிராமத்திற்கு திரும்பினேன் என்றால் 2009 ஆம் ஆண்டு திரும்ப வந்தேன். மேற்படி வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் தாவா சொத்தில் வீடுகள் கட்டப்பட்டு அதில் எனது தாத்தா மற்றும் சித்தப்பா ஆகியோர் குடியிருந்து வந்தனர் என்று நிரூபணம் செய்யப்பட்டால் மேற்படி ஆவணம் போலியான ஆவணம் ஆகிவிடும் என்றால் சரிதான்.

7. மேற்படி ஆவணத்தில் தாவாசொத்தின் கிழமேல் அளவு மற்றும் தென்வடல் அளவு ஆகியவை கண்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.138/2 தாவாசொத்திற்கு எந்த பக்கம் உள்ளது என்றால் கிழக்கு பக்கம் உள்ளது. வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் மேற்படி சர்வே எண்.138/2 யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தாத்தாவான 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது. சர்வே 138/1–க்கு தெற்கே உள்ள சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அருளானந்து வகையறா என்பவருக்கு பாத்தியப்பட்ட இடமாகும். மேற்படி தெற்கே உள்ள சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண் 138/1

மற்றும் 138/2 ஆகிய சொத்துக்களை சேர்த்து தான் எனது தாத்தா வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். ஆனால் வா.சா.ஆ.2 ஆவணமான இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தில் தெற்கு நான்குமாலாக 1ம் பிரதிவாதியின் இடம் காட்டப்படவில்லை என்றால் சரிதான்.

8. மேற்படி இனாம் செட்டில்மென்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்ட பிறகு அதில் அளவுகள் மற்றும் தாவா சொத்தின் நான்குமால் மற்றும் சொரூப அமைப்பு ஆகியவை தவறாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்பதால் பிரதிவாதிகள் மேற்படி ஆவணத்தை ரத்து செய்ய சொல்லி வாதி மீது திருவேகம்புத்தூர் காவல் நிலையத்தில் பல்வேறு புகார் கொடுத்தனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, என் தகப்பனாருக்கு தான் தெரியும். 2013,2014 ஆண்டுகளுக்குப் பிறகு எனது தந்தை பிரதிவாதிகளின் மீது தாவா சொத்து சம்பந்தமாக பல்வேறு புகார்கள் அளித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என் தகப்பனாருக்குதான் தெரியும். தாவாசொத்திற்கு என் தந்தை பெயரில் இருந்த பட்டாவை பிரதிவாதி எப்பொழுது ரத்து செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தந்தை மீது 1ம் பிரதிவாதி மூத்த குடிமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ், வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் புகார் அளித்துள்ளார் என்றால் அவரது அனைத்து மகன்களின் மீதும் தான் புகார் அளித்துள்ளார். மேற்படி புகாரை எப்பொழுது கொடுத்தார் என்றால் சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு கொடுத்தார்.

9. மேற்படி மனுவில் வருவாய் கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாசொத்தில் எப்பொழுது வீடு கட்டினோம் எப்பொழுது வீட்டுவரி செலுத்தினோம் என்பதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். நான் 2016,2017 ஆண்டிற்கான வீட்டு வரி ரசீதுகள் மட்டும் தான் தாக்கல் செய்து உள்ளேன் என்றும், வீடு கட்டியதற்கான பிளான் அப்ரூவல் மற்றும் மற்ற ஆவணங்கள் ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமான வீட்டு வரி ரசீதுகளை தாக்கல் செய்தால் எனது தகப்பனார் எப்பொழுது தாவாசொத்தில் வீடு கட்டினார் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி வீட்டுவரி ரசீதுகளை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். மேற்படி வீடும் எனது தகப்பனார் பெயரில் வேறஇல்லை என்றும் எனது தாயாரான மெக்கேல்அம்மாள் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.4 ஆவணமான வரி ரசீதுகளிலும் தாவா சொத்து என்ன வகைப்பாடு என்று காட்டப்படவில்லை என்றால் சரிதான்.

10. என் தந்தை பெயரில் இருந்த பட்டா ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து எனது தந்தை வருவாய் துறை அதிகாரிகளிடம் எந்த மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா வழக்கிற்கு முன்பு ஏற்பட்ட வருவாய் துறை நடவடிக்கைகள் மற்றும் காவல்துறை நடவடிக்கைகள்

குறித்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.8 புகார் ஆவணமான பூர்விக இடத்தில் மரம் வெட்டியது சம்பந்தமாக தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக 2014 ஆம் ஆண்டிற்கு பிறகு எங்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே பிரச்சனைகள் ஏற்பட்டது என்றால் சரிதான். தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு நான் மரியஆரோக்கியசாமியை தாக்கியதாக இரு தரப்பிலும் புகார் அளிக்கப்பட்டு உள்ளது என்றால் சரிதான். என் தகப்பனார் நேரடியாக தனது சகோதரர்களிடம் பிரச்சனை செய்தது கிடையாது என்றால் சரிதான்.

11. நான்தான் தாவா சொத்து சம்பந்தமாக பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் எனது தாயிடம் அவர்கள் பிரச்சனை செய்து வருகிறார்கள்.

மேற்படி புகார் சம்பந்தமான ஆவணங்களை பார்த்தால் மேற்படி இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்பட்ட விவரம் எனது தந்தைக்கு 2014 ஆம் ஆண்டு தெரிய வந்துவிட்டது என்பது தெளிவாகும் என்றால் சரியல்ல, அவருக்கு 2014 ஆம் ஆண்டு தெரியாது. 2,3 பிரதிவாதிகள் மற்றும் மரியஆரோக்கியசாமி மற்றும் எனது மற்ற சித்தப்பாக்களுக்கு பழனிவேல் கிராமத்தில் உள்ள வீட்டை தவிர வேறு வீடு கிடையாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை பற்றிய விவரங்கள் எனக்கும் என் தந்தைக்கும் முழுமையாக தெரியும் என்றால் சரிதான். மேற்படி இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்பட்டது எனக்கு 2019 ஆம் ஆண்டு தான் தெரியும்

என்பதற்கான வில்லங்க சான்றிதழையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணம் 03.09.2025 அன்று எடுக்கப்பட்டது என்றால் சரிதான். பழைய வில்லங்கச் சான்றிதழை எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

12. வா.சா.ஆ.1 ஆவணம் 04.08.2025 அன்று எடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணம் பற்றிய முழு விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பற்றிய விபரங்கள் எனது தந்தைக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பத்திரத்தின் அசல் யாரிடம் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தந்தையை விசாரித்தால் யாரிடம் உள்ளது என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். தாவாசொத்தில் நான் வசித்து வரும் பகுதியை நீக்கி மற்ற பகுதியில் 1ம் பிரதிவாதி தன் மனைவி இறக்கும் வரை வசித்து வந்தார் என்றும், மேலும் எனது சித்தப்பாக்கள் தனது குடும்பத்தாருடன் வீடு கட்டி வசித்து வந்தார்கள் என்றும், சொன்னால் வீடு நான் கட்டினேன் அதில் அவர்கள் வகித்து வருகிறார்கள். நான் வசித்து வரும் வீட்டை நீக்கி தாவா சொத்தில் உள்ள மற்ற வீடுகள் சம்பந்தமான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

13. என் தகப்பனார் எனக்கு எந்தவித பவர் ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றும் பொய்யான பவர் ஆவணத்தை வைத்து நான் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தாவா வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது

அல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பவர் ஆவணத்தில் சாட்சிகள் யாரும் கையெழுத்து செய்யாததால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 68–படி மேற்படி ஆவணம் செல்ல தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வாதி நல்ல உடல் நிலையுடன் திடகாத்திரமாக இருக்கும் பொழுது நான் சாட்சியம் அளிக்க தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.03.18 16:09:13 +0530